ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1815/18 - 2013 ජූනි මස 21 වැනි සිකුරාදා - 2013.06.21

*1815/18 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்**

கடந்த அண்மைக் காலத்தின் போது யுத்தம் செய்த பயங்கரவாத அல்லது வேறு குழுவொன்றின் ஏதேனும் நடவடிக்கைகள் காரணமாக குறித்த சில ஆட்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக வந்துள்ளனராதலாலும்,

2. 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கிணங்க,

2.1 உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளொருவராக இருக்கின்றவரான அல்லது இருந்தவரான,

2.2 2009 ஆம் ஆண்டின் இறுதிவரையான ஏதேனும் ஆண்டிற்கு வடமாகாணத்திலுள்ள அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர்கள் இடாப்பில் அவரது பெயர் காணப்படுகின்றவரான; அத்துடன்

2.3 2009 ஆம் ஆண்டின் பின்னரான நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவு செய்யப்பட்டிராதவரான.

என்ற விடயங்கள் குறிப்பாக நிரூபிக்கப்படல் மற்றும் அவர் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள ஒருவரென அவர் தற்போது வதிவைக் கொண்டுள்ள பிரிவின் கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் என்பவற்றினூடாக 2009 மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன் தான் நிரந்தர வதிவிவைக் கொண்டிருந்த தேர்தல் மாவட்டத்தில் தேருநர் இடாப்பில் பெயரைப் பதிவு செய்து கொள்வதற்காக உரிய தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலரிடம் கோரிக்கை விடுப்பதற்கு மேற்குறித்த சட்டத்தினால் உரிமை அளிக்கப்பட்டுள்ளதாதலாலும்.

3. மேற்குறித்த சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கமைய மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பிரசை ஒருவரின் பிள்ளைகளான,

3.1 உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த தேதியன்று பதினெட்டு வயதை எய்தியிராதவர்களும் அத்துடன் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்பு தொடர்பில் மீளாய்வு எத்தேதியன்று தொடங்கியதோ அத்தேதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்,

3.2 அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த பின்னர் பிறந்தவரும் மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பில் மீளாய்வு எத்தேதியிலிருந்து தொடங்கியதோ அத்தேதியிலிருந்து பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்; அத்துடன்

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3.3 2009 ஆம் ஆண்டின் பின்னரான நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவு செய்யப்பட்டிராதவராகவுள்ளவர்களுமான ஆட்களுக்கு

பிறப்புச் சான்றிதழையும் கிராம அலுவலரால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விநியோகிகப்படுகின்ற சான்றிதழொன்றையும் சமர்ப்பிப்பதனூடாக 2009 மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் தான் / தனது பெற்றோர் இடம் பெயர்ந்தோராக ஆவதற்கு முன்னர் நிரந்தர வதிவைக் கொண்டிருந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

4. 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(1) ஆம் உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய, மேற்குறித்த 2 மற்றும் 3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பெயர்களை உள்ளடக்கி, 2012 ஆம் ஆண்டிற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சார்பாக குறை நிரப்பு தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதற்காக விண்ணப்பப்படிவங்களைக் கையேற்றல் 2013, யூன் மாதம் 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013, யூன் மாதம் 28 ஆந் திகதி நிறைவடைகின்றதெனவும் உரிய விண்ணப்பப்படிவங்களை அனைத்து தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவற்றை முறையாக நிரப்பி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள தேர்தல் மாவட்டங்களின் (யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திகாமடுல்ல, திருகோணமலை) பதிவு அலுவலர்களுக்கு சமர்ப்பிக்குமாறும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

5. 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறை நிரப்புப் பட்டியலைத் தயாரித்தல் யூன் 28 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு அது தொடர்பான அறிவித்தல் யூன் 29 ஆந் திகதி வெளியிடப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளதாதலாலும், அப்பட்டியலில் பெயர்கள் உள்ளடக்கப்படாத மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆட்களுக்கு தத்தம் பெயர்களைக் குறைநிரப்புப் பட்டியலில் உட்சேர்த்துக் கொள்வதற்கான மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு அன்று முதல் 7 நாட்களைக் கொண்ட மேலதிக காலக்கெடுவொன்றை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள்ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2013, யூன் 21.

7-190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.